தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 07 08-12-2007

பன்முகத்தேர்வு வினாக்கள் **Section A** வருடம்: 07

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | August தமிழில் எந்த மாதம் என எழுதுக<br>1. தை 2. மாசி 3. பங்குனி 4. ஆவணி | 1 | 2 | 3 | 4 |
| 2 | செய்த ------ ஒருநாளும் மறக்க வேண்டாம்<br>1.உறவு 2. நட்பு 3. நன்றியை 4. சுற்றம் | 1 | 2 | 3 | 4 |
| 3 | காசுக்கு ஒத்தசொல் எது?<br>1.கடல் 2. மாடிவீடு 3. பணம் 4. மண் | 1 | 2 | 3 | 4 |
| 4 | **ஆடவன்** என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல்<br>1. பாடகி 2. நண்பி 3. இறைவி 4. மகளிர் | 1 | 2 | 3 | 4 |
| 5 | இந்திமொழி பேசும் மக்கள் -------<br>1. ஆங்கிலேயர் 2. ஆரியர் 3. இத்தாலியர் 4. இந்தியர் | 1 | 2 | 3 | 4 |
| 6 | சோம்பல் என்பதன் எதிர்ச்சொல் என்ன?<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. சுறுசுறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 7 | நடந்து செல்வதற்கு -------- தெரியவில்லை.<br>1. வலி 2. வழி 3. வளி 4. வாலி | 1 | 2 | 3 | 4 |
| 8 | அவள் அழகாக நடனம் ஆடினாள். இதில் வினைச்சொல்<br>1. ஆடினாள் 2. நடனம் 3.அழகாக 4 அவள் | 1 | 2 | 3 | 4 |
| 9. | பள்ளியில் பாடம் கற்பிப்பவர் -------------.<br>1. ஆசிரியர் 2. மாணவர் 3. தலைமையாசிரியர் 4. தந்தை | 1 | 2 | 3 | 4 |
| 10. | அவள் நடந்து ---------<br>1. சென்றான் 2. சென்றாள் 3. செல்கிறார்கள் 4.செல் | 1 | 2 | 3 | 4 |
| 11. | நீ ஏன் வரவில்லை. இதில் பயனிலை<br>1. வரவில்லை 2. வில்லை 3. ஏன் 4. நீ | 1 | 2 | 3 | 4 |
| 12. | காகம் ---------. கிளி பேசும்<br>1. கூவும் 2. கத்தும் 3. பேசும் 4. கரையும் | 1 | 2 | 3 | 4 |
| 13. | உயர்வு என்பதன் எதிர் சொல்.<br>1. மேடு 2. உயர்வு 3. இறக்கம் 4. தாழ்வு | 1 | 2 | 3 | 4 |
| 14. | தேன் என்றால் ஆங்கிலத்தில்<br>1. coconut 2. salt 3. honey 4. ghee | 1 | 2 | 3 | 4 |
| 15 | பொருத்தமற்ற சொல் எது<br>1. கலைவிழா 2. திருவிழா 3. மணவிழா 4. சுத்தம் | 1 | 2 | 3 | 4 |
| 16 | கோழியின் இளமைப் பெயர்<br>1. குட்டி 2. கன்று 3. பிள்ளை 4. குஞ்சு | 1 | 2 | 3 | 4 |
| | | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17. | அந்தப் பந்து மேலிருந்து கீழே ------------.<br>1. விழுந்தன 2. விழுந்தது 3. ஓடியது. 4. சென்றன. | | | | |
| 18. | கல்யாணத்தில் கொட்டப்படும் முரசு<br>1.மேளம் 2. போர்முரசு 3. தவில் 4. மத்தளம் | 1 | 2 | 3 | 4 |
| 19. | ராதா --------- நோக்கிச் சென்றாள்.<br>1.மாடியில் 2. மாடியிலிருந்து 3. மாடிக்கு 4. மாடியை | 1 | 2 | 3 | 4 |
| 20. | அந்தப் பெண்ணின் கூந்தல் நீளமானது. கூந்தலின் ஒத்தசொல்<br>1. தலை 2. மயிர் 3.தலைமுடி 4. மூக்கு | 1 | 2 | 3 | 4 |
| 21 | இருபத்தைந்து எண்களில் எழுதினால்?<br>1. 15 2. 25 3. 35 4. 05 | 1 | 2 | 3 | 4 |
| 22 | குழந்தை ------- என நடந்தது<br>1. குடுகுடு 2. விறுவிறு 3. சலசல 4. சிறுசிறு | 1 | 2 | 3 | 4 |
| 23 | சந்திரனை ஆங்கிலத்தில் இப்படி அழைப்பர்<br>1. Sun 2. Star 3. Moon 4. Jupiter. | 1 | 2 | 3 | 4 |
| 24 | ஆற்றோரம் பிரித்து எழுதினால்<br>1. ஆறு + ஓரம் 2. ஆற் + றோரம்<br>3. ஆற்று+ ஓரம் 4. ஆ + ஓரம் | 1 | 2 | 3 | 4 |
| 25 | பூங்கா என்பது<br>1. வீடு 2 . வாசல் 3. பனைமரம் 4. தோட்டம் | 1 | 2 | 3 | 4 |
| 26 | தெரு என்பது<br>1. house 2. home 3. road 4. hospital | 1 | 2 | 3 | 4 |
| 27 | ஆயிரம் என்பது<br>1. 1000 2. 100 3. 100000 4. 10000 | 1 | 2 | 3 | 4 |
| 28 | ஒற்றன் என்பது ---------------<br>1. ஒருவன் 2. உளவாளி 3. உழுபவன்<br>4. கொடையாளி | 1 | 2 | 3 | 4 |
| 29 | சித்திரம் வரைபவன்<br>1. கவிஞன் 2 பாடகன் 3. ஓவியன் 4. சிற்பி | 1 | 2 | 3 | 4 |
| 30 | விண் - உலகம் சேர்த்து எழுதுக<br>1.விண்ணுலகம் 2. விண்ணுலகு 3. விண்உலகம்<br>4. விஉலகம் | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு | வகுப்பு 07 | 08-12-2007

**வினாக்கள்** **Section B** வருடம்: 07

1. அன்று பொங்கல் விழா. அம்மாவும் அப்பாவும் புத்தாடைகளையும் பல பரிசுப் பொருட்களையும் மேசை மீது வைத்தார்கள். அப்போது தாத்தா 'பொங்கல் திருநாள் ஏன் கொண்டாடப்படுகின்றது'? என்றார். ஒருவருக்கும் தெரியவில்லை. உடனே தாத்தா மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இல்லம் போன்றவை தேவைப்படுகின்றது. இதில் உணவு மிக முக்கியமானது. எனவே வேளாண்மையைச் சிறப்பிக்கவும், தானியங்களை அறுவடை செய்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கவும், பயிர்கள் விளையத் துணை புரிந்தவர்களுக்கு நன்றி செலுத்தவும் தான் விவசாயிகள் பொங்கல் விழாக் கொண்டாடுகின்றனர். தமிழ் நாட்டில் உழவர்கள் அதிகம். அவர்கள் பொங்கலுக்கு முன்தினம் சுற்றுப் புறத்தை துப்பரவு செய்து அலங்கரித்து அந்த நாளை போகிப் பண்டிகையாக கொண்டாடுவர். பின் தைத்திங்கள் முதல் நாள் தானிய அறுவடை அன்று புது அரிசியைப் புதுப்பானையில் இட்டு புது வெல்லம், பால் என்பன இட்டு பொங்கல் செய்வர். பின் எல்லோரும் சேர்ந்து உண்டு, புத்தாடை அணிந்து கொண்டாடுவார்கள். அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் செய்வார்கள். மாடுகள் வயலை உழுகின்ற படியால் அதற்குப் பொங்கலிட்டு கொண்டாடுவார்கள்.

அம்மாவும் அப்பாவும் எதனை மேசை மீது வைத்தார்கள்?

______________________________________________

மக்களுக்கு தேவைப்படுவது என்ன?

______________________________________________

தானிய அறுவடை எப்போது தொடங்குகிறது.?

______________________________________________

பொங்கலுக்கு முதல் நாள் என்ன பண்டிகை கொண்டாடுவார்கள்.?

______________________________________________

பொங்கலுக்கு அடுத்த நாள் கொண்டாடுவது என்ன?

______________________________________________

(10 புள்ளிகள்)

2. ஒரு பிரபல பாடகர் இந்தியாவிலிருந்து வருகிறார். அதற்கு ஒரு விளம்பரம் எழுதித் தரும்படி கேட்கிறார்கள். அதை எப்படி தயாரித்துக் கொடுப்பீர்? நிகழ்ச்சி விபரம், நடக்கும் இடம், திகதி போன்ற விடயங்கள் அதில் அடங்க வேண்டும். (75 சொற்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

**3.சரியான சொல்லின் கீழ் கீறிடுக. பின் வசனத்தை சரியாக எழுதுக.**

அவன் பிறந்த மாதம் (ஆனி, ஆணி) ஆகும்.

______________________________________________

அந்த மலரிலிருந்து இனிய (மணம், மனம்) வீசியது.

______________________________________________

திடீரென பெரு (மழை, மலை) பெய்யத் தொடங்கியது.

______________________________________________

அந்தச் சிறுமி பணத்தைத் (தொலை, தொழை) த்து விட்டாள்.

______________________________________________

அந்தக் குழந்தை பேசமுடியாமல் (விழித்தது, விலித்தது).

______________________________________________

(10 புள்ளிகள்)

**4. நீர் வழியில் ஒரு நாய்க்குட்டி அடிபட்டிருப்பதைக் கண்டால் உடன் எடுக்கும் நடவடிக்கைகள் 5 தருக?**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

**5. கீழே உள்ள படத்தை பார்த்து நீர் விளங்கிக் கொண்டதை 60 சொற்களுக்கு குறையாமல்**



**எழுதுக.**

(10 புள்ளிகள்)

6. மாறி இருக்கும் சொற்களை மாற்றி, சரியான வசனமாக எழுதுக.

ஒளிந்து - ஓடி – அந்த எலி - கொண்டது

நலம் - அவளுக்கு - உடல் - நன்றாக - இல்லை.

பற்றைக்குள் - அந்தப் - பெரிய - பாம்பு - இருக்கிறது

அவரின் - இனிமையானவை – பாடல்கள் - மிகவும்

அங்கே – மனிதர்கள் - நின்றார்கள் - கூட்டமாக – பலர்

(10 புள்ளிகள்)

7. விம்பிள்டன் டென்னிஸ் ஆட்டம் பார்க்கப் போக இருப்பதைப் பற்றி உமது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)